**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்**
**முன்னிலை. திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L..,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056 விசுவாசு வருடம் ஐப்பசி மாதம் 25ஆம் நாள்**
**I.A.No .08/2025**
**in**
**H.M.O.P.No.27/2024**
**(CNR.No.TNDG190003302024)**

பவதாரணி ... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிராக/

ஞானதயாளன் ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

இம்மனுவானது கடந்த 06.02.2025 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, அன்றைய தினமே கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 29.10.2025 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.M.சௌந்திரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.முத்துபாண்டி அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிருரை, சான்றாவணங்கள், வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

**1.** மனுதாரரின் அடிப்படை தேவையான உணவு, உடை, உறைவிடம், மருத்துவம் மற்றும் இம்மனு செலவுதொகை ஆகியவைகளுக்காக மாதந்தோறும் ரூ.20,000/—மும், மனுதாரரின் மைனர் மகளின் உணவு, உடை, மருத்துவம், பராமரிப்பு ஆகியவற்றிற்கு மாதம் தோறும் ரூ.20,000/—மும், மொத்தம் ரூ.40,000/— இடைக்கால ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர்/மனுதாரர் வழங்கிட உத்தரவிட வேண்டி இந்து திருமணச்சட்டம் பிரிவு 24 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனு மற்றும் பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கின் எதிர்மனுதாரர். எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் கடந்த 24.05.2020ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் H.M.O.P.No.27/2024 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரும், எதிர்மனுதாரரும் குடும்பம் நடத்தியதன் பலனாக கடந்த 16.09.2021ம் தேதி ஜனனியா என்ற பெண் குழந்தை பிறந்து தற்போது அக்குழந்தைக்கு மூன்று வயதாகிறது. ஒட்டன்சத்திரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் M.C.No.3/2024 என்ற எண்ணில் மனுதாரர், எதிர்மனுதாரர் மீது, மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் ஜீவனாம்சம் கோரி கு.வி.மு.ச. பிரிவு 125ன் படியான மனு நிலுவையில் உள்ளது. மனுதாரர் இந்நீதிமன்றத்தில் H.M.O.P.No.16/2024 என்ற எண்ணில் சேர்ந்து வாழக்கோரி தாக்கல் செய்த மனு விசாரணையில் இருந்து வருகிறது. மனுதாரர் கடந்த 29.08.2021ம் தேதியிலிருந்தும், வளைகாப்பு முடிந்து தனது பெற்றோர் ஊருக்கு சென்ற நாள் வரை எதிர்னுதாரர், மனுதாரரையும், குழந்தையையும் அழைத்து செல்லாத காரணத்தினால் மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். எதிர்மனுதாரர் சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.1,00,000/–த்திற்கு மேல் சம்பளம் பெற்று வருகிறார். எதிர்மனுதாரர் திண்டுக்கல் டவுன், RMTC நகரில் சுமார் ரூ.35,00,000/–க்கு மேல் அவரது தாயார் பானுமதி பெயரில் வீடு வாங்கியுள்ளார். மேலும் திண்டுக்கல் மாவட்டம், கோபால்பட்டி, ஒத்தக்கடையில் எதிர்மனுதாரரின் தாயார் பானுமதி பெயரில் ரூ.10,00,000/– மதிப்புள்ள காலியிடம் எதிர்மனுதாரர் வாங்கி கொடுத்துள்ளார். எதிர்மனுதாரர் வட்டிக்கு விடுவதால் மாதம் ரூ.30,000/– வருமானம் வருகிறது. எதிர்மனுதாரரின் தாயார் அங்கன்வாடியில் சத்துணவு ஊழியராக பணியாற்றி மாதம் ரூ.20,000/– சம்பளம் பெற்று வருகிறார். எதிர்மனுதாரர் தனது வீட்டில் ஜவுளி வியாபாரம் செய்வதன் வழியாக மாதம் ரூ.18,000/– சம்பாதித்து வருகிறார். மனுதாரர் கேட்கும் ஜீவனாம்சம் தொகையை வழங்க எதிர்மனுதாரருக்கு போதிய வசதி உள்ளது. மனுதாரர் அவரது குழந்தையுடன் பெற்றோர்களுடன் வாடகை வீட்டில் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கணவர் என்ற முறையிலும், குழந்தைக்கு தகப்பனார் என்ற

முறையிலும் பராமரிக்க சட்டப்படி கடமைப்பட்டுள்ளார். மனுதாரருக்கு உணவு, உடை, உறைவிடம், மருத்துவ செலவு, போக்குவரத்து செலவு உட்பட அத்தியாவசிய செலவுகளுக்கும் ரூ.20,000/−மும், மொத்தம் ரூ.40,000/−மும் மனுதாரர்களுக்கு ஜீவனம்சமாக தேவைப்படுவதால், இடைக்கால ஜீவனம்சம் வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்மனு உரை சுருக்கம்:**

எதிர்மனுதாருக்கும் மனுதாரருக்கும், கடந்த 24.05.2020 தேதி திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னர் மனுதாரரின் வீட்டில் கூட்டுக் குடும்பமாக கணவன் மனைவியாக நல்லமுறையில் வாழ்ந்து வந்துள்ளனர். திருமண வாழ்வின் பயனாக கடந்த 16.09.2021ம் தேதியன்று ஜனனியா என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது. மனுதாரர், எதிர்மனுதாரரிடம் தனிக்குடித்தனம் போக தனி வீடு பார்க்க சொல்லி வற்புறுத்தி எதிர்மனுதாரரை மரியாதையில்லாமல் பேசி, அலட்சியப்படுத்தி, உதாசீனப்படுத்தியுள்ளார். எதிர்மனுதாரரின் குழந்தையை, அவரது தாயாரும், தங்கையும் பார்க்கக் கூடாது என்றும் சண்டை சச்சரவுகள் செய்து வந்துள்ளார். கடந்த 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்த ஒத்துழைக்காமல் பிரிந்து வாழ்ந்துள்ளார். எதிர்மனுதாரரின் குழந்தைக்கு பெயர் வைத்தது மற்றும் மொட்டை அடித்தது போன்ற எந்த விசேஷங்களையும் எதிர்மனுதாரருக்கு தெரிவிக்காமலேயே, மனுதாரரும், அவரது பெற்றோர்களும் இருந்துள்ளனர். இதுகுறித்து மனுதாரரிடமும், அவரது பெற்றோர்களிடமும் கேட்ட போது, மனுதாரரின் தாயார் ஆனந்தி என்பவர், எதிர்மனுதாரரிடம் இந்தக் குழந்தை உனக்கு பிறக்கவில்லை என்று சொல்லி அவனமாப்படுத்தியுள்ளார். கடந்த 17.10.2024ம் தேதி மனுதாரர் யாதொரு காரணமும் இல்லாமல் எதிர்மனுதாரருடன் சண்டை சச்சரவுகள் செய்துவிட்டு, தனது பொருட்களை எல்லாம் எடுத்துக்கொண்டு, அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார். எதிர்மனுதாரரும், அவரது பெற்றோர்களும், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஊர்பெரியோர்கள் வழியாக மனுதாரரை தன்னுடன் சேர்ந்து அழைத்தும் மனுதாரர் மறுத்துள்ளார். மனுதாரரும், அவரது குடும்பத்தினரும், மனமொத்த

விவாகரத்து (Mutual consent Divorce) பெற்றுக் கொள்ளலாம் என்று கூறியதன் பேரில், எதிர்மனுதாரரும் ஒப்புக்கொண்டு, மாண்புமிகு ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P. No.436/2023 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு, அதன்பின்னர் மனுதாரர் தரப்பில் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர் கடந்த 17.10.2024 ம் தேதி முதல் சுமார் 2 வருடங்களாக எதிர்மனுதாரரை எவ்வித நியாயமான காரணமுமின்றி கைவிடுப்பு செய்து தனித்து பிரிந்து வாழ்கிறார். மனுதாரரின் செயலால் எதிர்மனுதாரர் உடலளவிலும், மனதளவிலும் கொடுமைக்கு ஆளாகியுள்ளார். எதிர்மனுதாரர் தனது எதிர்கால வாழ்க்கை கருதியும் இனிமேலும் மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். மனைவி என்ற முறையில் எதிர்மனுதாரருக்கு, மனுதாரர் செய்ய வேண்டிய கடமைகளை செய்யாமலும், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வராமலும் புறக்கணித்து வாழ்ந்து வருகிறார். மனுதாரர் B.Sc., (IT) படித்துவிட்டு, Focus Edumatic என்ற நிறுவனத்தில் online tutor வேலை பார்த்து, மாதம் ரூ.25,000/– சம்பளம் பெற்று வருகிறார். மனுதாரரின் பெயரில் ஒட்டன்சத்திரத்தில் 5 செண்ட் காலிமனையிடமும், மனுதாரரின் தாயார் ஆனந்தி என்பவருக்கு தேனி மாவட்டம், தாமரைக்குளம் மற்றும் ஓடைப்பட்டி ஆகிய ஊர்களில் சொந்தமாக விவசாயத் தோட்டமும் உள்ளது. விவசாய தோட்டங்களின் மூலம் வருடத்திற்கு ரூ.10,00,000/– வரை வருமானம் வருகிறது. மனுதாரரின் தகப்பனார் முனீஸ்வரன் என்பவர் (SETC) அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் அரசுப்பணி புரிந்துவந்து இறந்துவிட்டதால், தற்போது அவரது இறப்பிற்கு பின்னர் பென்சன் தொகையை மனுதாரரும், அவரது தாயாரும் பெற்று வருகின்றனர். மனுதாரரின் பெற்றோர்களுக்கு மனுதாரர் மட்டுமே ஒரே மகள் என்பதால், அனைத்து சொத்துக்களுக்கும் மனுதாரர் மட்டுமே ஒரே வாரிசு என்ற முறையிலும், வருமானங்களின் வழியாக மனுதாரர் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரர் சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.69,500/– சம்பளம் பெற்று, சம்பளத்தை வைத்து வங்கிக் கடன் தவணைகள், வீட்டு வாடகை, மனுதாரரின் உணவு, மருத்துவ செலவு உள்ளிட்ட வீட்டுக்கு தேவையான அத்திவாசியத் தேவைகள் மற்றும் எதிர்மனுதாரரின் வயதான தாயாருக்கு தேவையான தொடர் மருத்துவ சிகிச்சை மற்றும் இதர செலவுகள் செய்தும், அவரை

பராமரித்தும் மிகுந்த கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். குழந்தை ஜனனியாவிற்கு தகப்பனார் என்ற முறையில், மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க ஒப்புக்கொள்கிறார். ஆனால் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டிய தேவை எதுவும் இல்லை. மனுதாரர் மீது, எதிர்மனுதாரர் விவாகரத்து பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள H.M.O.P.No.27/2024 என்ற வழக்கு நிலுவையில் இருக்கும் போது மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சம் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

**5. பிரச்சனைக்கான தீர்வு**

**5.1.** மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 24.05.2020ம் தேதி நடைபெற்று, திருமணத்தின் பயனாக ஜனனியா என்ற பெண் குழந்தை பிறந்ததாகவும், மனுதாரர், எதிர்மனுதாரர் மீது, மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் ஜீவனாம்சம் கோரி கு.வி.மு.ச. பிரிவு 125 ன் படியான மனுவும், மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழக்கோரி இந்நீதிமன்றத்தில் H.M.O.P.No.16/2024 என்ற எண்ணில் தாக்கல் செய்த மனுவும் நிலுவையில் இருந்து வருவதாகவும், மனுதாரர் கடந்த 29.08.2021ம் தேதியிலிருந்தும், வளைகாப்பு முடிந்து தனது பெற்றோர் ஊருக்கு சென்ற நாள் வரை எதிர்மனுதாரர், மனுதாரரையும், குழந்தையையும் அழைத்து செல்லவில்லை என்றும், மனுதாரருக்கு மாதந்தோறும் ரூ.40,000/—இடைக்கால ஜீவனாம்ச தொகை வழங்கும் அளவிற்கு எதிர்மனுதாரருக்கு வசதி உள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் மனுவானது முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

**5.2.** மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 24.05.2020ம் தேதி நடைபெற்ற, திருமணத்தின் பயனாக ஜனனியா என்ற பெண் குழந்தை பிறந்ததாகவும், கடந்த 17.10.2024ம் தேதி மனுதாரர் யாதொரு காரணமும் இல்லாமல் எதிர்மனுதாரருடன் சண்டையிட்டு, தனது பொருட்களை எடுத்துக்கொண்டு, அவரது

பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டதாகவும், எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ அழைத்தும் மனுதாரர் மறுத்துவிட்டதாகவும், மனுதாரரும் அவரது குடும்பத்தினரும், மனமொத்த விவாகரத்து (Mutual consent Divorce) பெற்றுக் கொள்ள தாக்கல் செய்த H.M.O.P.No.436/2023 மனுவானது மனுதாரர் தரப்பில் திரும்ப பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் செயலால் எதிர்மனுதாரர் உடலளவிலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.25,000/– சம்பளம் பெற்று வருவதாகவும், அவரது பெற்றோர்களுக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களின் வழியாக வருமானம் வருவதாகவும், எதிர்மனுதாரர் சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.69,500/– சம்பளம் பெற்று, தனது வயதான தாயாருக்கு மருத்துவ செலவுகள் செய்து, அவரை பராமரித்து வருவதாகவும், மனுதாரரின் உணவு, மருத்துவ செலவு உள்ளிட்ட வீட்டுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகள் செய்து வருவதாகவும், குழந்தை ஜனனியாவிற்கு தகப்பனார் என்ற முறையில், மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க ஒப்புக்கொள்வதாகவும், ஆனால் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டிய தேவை எதுவும் இல்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுதாரர் தரப்பில் மனுவானது முன்னெடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

**5.3.** மனு சங்கதிகளை பரிசீலனை செய்து பார்க்கும்போது, எதிர்மனுதாரர், மனுதாரர் மீது விவாகரத்து கோரி H.M.O.P.No.27/2024 என்ற மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்தும், ம.சா.1 என்பவரை எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தும், மனுதாரர் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்கு வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், இடைக்கால ஜீவனாம்சம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

**5.4.** மனுதாரர், எதிர்மனுதாரர் மீது ஒட்டன்சத்திரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் M.C.No.3/2024 என்ற எண்ணில் மனுதாரருக்கும், அவரது

குழந்தைக்கும் வாழ்க்கை பொருளுதவி கோரி கு.வி.மு.ச. பிரிவு 125ன் கீழான தாக்கல் செய்யப்பட்ட மனுவானது கடந்த 12.08.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ள உத்தரவு நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி M.C.No.3/2024 மனுவில் ஏற்பட்ட உத்தரவில் எதிர்மனுதாரர் மாதம் ஒன்றிற்கு தலா ரூ.15,000/– வீதம் மொத்தம் ரூ.30,000/– தொகையை மனுதாரர்களுக்கு வாழ்க்கை பொருளுதவி வழங்கவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. கு.வி.மு.ச. பிரிவு 125ன் கீழான உரிமை என்பது வேறு, பிரிவு 24ன் கீழான உரிமை என்பது வேறாகும். பிரிவு 24ன் கீழான உரிமை என்பது HMOP No.27/2024 என்ற வழக்கு முடியும் வரை உள்ள தனிப்பட்ட உரிமையாகும். கு.வி.மு.ச. பிரிவு 125இன் கீழாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு இந்து திருமணச் சட்டம், பிரிவு 24–இன் கீழாக உரிமையியல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிப்பதை தடை செய்யாது. பிரிவு 24 வழக்கு நடைமுறைகளின் போது செய்யப்படும் ஒரு தற்காலிக பரிகாரம் என்று சட்ட நிலைப்பாடு உள்ளது. பிரிவு 24 என்பது மனைவி அல்லது கணவன் தன்னை பராமரித்துக்கொள்ளவும் வழக்கு நடைமுறைகளுக்கு செலவிடவும் போதிய வருமானம் இல்லாமல் சிரமப்படக்கூடாது என்பதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதின் ஆக்கக்கூறுகள் இம்மனுவிற்கு பொருந்துவதாக உள்ளது. எனவே, ஒட்டன்சத்திரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் M.C.No.3/2024 என்ற எண்ணில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது இம்மனுவை அனுமதிப்பதற்கு தடையாக இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**5.5.** மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 24.05.2020ம் தேதி திருமணம் நடைபெற்றதும், இருவருக்கும் ஜனனியா என்ற பெண் குழந்தை பிறந்துள்ளதும் இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இம்மனுவின் மனுதாரர் வீட்டில் இருந்தபடி பணி செய்து மாதம் ரூ.25,000/– சம்பளம் பெற்று வருகிறார் என்று எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லியுள்ள நிலையில், அதை நிரூபிக்கும் விதமாக எந்த வித சாட்சியமும், சான்றாவணமும் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், மனுதாரரின் தகப்பனார் அரசு போக்குவரத்து கழகத்தில் பணி புரிந்து இறந்துவிட்டதால் அவருக்கு கிடைக்கக்கூடிய ஓய்வூதியம் மனுதாருக்கும், அவரது தாயாருக்கும் கிடைப்பதாகவும் அதை வைத்துமனுதாரர் செல்வ செழிப்பாக வாழ்ந்து வருவதாகவும்,

சொல்லியுள்ள நிலையில், மனுதாரரின் தகப்பனார் இறந்துள்ள நிலையில், பென்சன் தொகையானது இந்த மனுதாரருக்கு கிடைக்காது. அவரது தாயாருக்கு மட்டும் கிடைக்கும். மேலும், மனுதாரரின் தகப்பனார் இறந்துள்ள நிலையில் அவரது பணப்பலன்கள் இந்த மனுதாரருக்கு கிடைத்ததாக எதிர்மனுதாரர் தரப்பில் நிரூபிக்க வில்லை. இந்தமனுதாரரின் பெயரில் சொத்துக்கள் எதுவும்இருப்பதாக எந்தவித ஆவணத்தையும் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. இந்த மனுதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ஏதாவது ஒரு தொகை நிரந்தரமாக வருமானம் வருகிறது என்பதை காட்டுவதற்கு எந்த ஒரு ஆவணத்தையும் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை.

**5.6.** எதிர்மனுதாரர், மாதம் ரூ.69,500/- சம்பளம் பெற்று வருவதாக எதிர்மனுஉரையில் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் வீட்டிற்கு கடன் இருப்பதாகவும், தனது வயதான தாயாரை பராமரித்து வருவதாகவும் சொல்லியுள்ள நிலையில், கடன் விபரத்தையும், தனது தாயாரை பராமரித்து வரக்கூடிய காரணத்திற்காக மட்டுமே மனுதாரரையும், அவரது குழந்தையையும் ஒதுக்கிவிட முடியாது. எதிர்மனுதாரரின் தாயாருக்கு மாதம் ஒன்றுக்கு தொகை ரூ.2,000/- செலவு செய்வதாக உறுதிமொழி படிவத்தில் எதிர்மனுதாரர் கொடுத்துள்ளார். மேலும், கடன் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கான ஆதரவுகளை எதிர்மனுதாரர் முன்னிலைப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர் தனது மனைவியான மனுதாரரையும், அவரது குழந்தையையும் காப்பாற்ற கடமைப்பட்டுள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள உறுதிமொழி படிவத்தின் தன்மைப்படியும், எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள உறுதிமொழி படிவத்தின் தன்மைப்படியும், மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் எதிர்மனுதாரர் நன்றாக வருமானம் ஈட்டி வருவதும், மனுதாரர் எவ்வித வருமானமும் இன்றி இருப்பதும் அறிய முடிகிறது. இந்நிலையில், இவ்வழக்கு முடியும் வரையில் மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் எதிர்மனுதாரர் வழக்கு செலவுக்காகவும், அடிப்படை தேவைகளான உணவு, உடை, மருத்துவம், பராமரிப்பு ஆகியவைகளுக்காக இம்மனு தாக்கல் செய்த நாள் முதல் இவ்வழக்கு முடியும் நாள் வரை மனுதாரருக்கும்,

அவரது குழந்தைக்கும் இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வழங்க உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**5.7.** மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் மாதம் ஒன்றுக்கு எதிர்மனுதாரர் ரூ.10,000/– வழங்க வேண்டும் என்று தீர்மானித்துள்ள நிலையில், காலத்தை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மனுதாரருக்கும், அவரது மைனர் குழந்தைக்கும் எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– இடைக்கால வாழ்க்கை பொருளுதவியாக HMOP No.27/2024 மனு தாக்கல் செய்த 13.10.2023 ம் நாளிலிருந்து இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் நாள் வரை செலுத்த வேண்டும் எனவும், 13.10.2023 ம் நாள் முதல், இம்மனு உத்தரவு நாளான 11.11.2025 ம் நாள் வரை மனுதாரருக்கு எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டிய நிலுவை தொகையினை, 11.11.2025 ம் நாள் முதல் எதிர்வரும் மூன்று (3) மாத காலத்திற்குள் மொத்தமாக வழங்க வேண்டும் என்றும், 11.11.2025 ம் தேதிக்கு பிறகு ஒவ்வொரு மாத வாழ்க்கை பொருளுதவியை எதிர்வரும் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5 ம் தேதிக்குள் எதிர்மனுதாரர், மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் செலுத்த வேண்டும் எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. இம்மனுவின் செலவு தொகையினை மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும் உத்தவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**6. இறுதியில்,**

**1.** இம்மனு பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**2.** மனுதாரருக்கும், அவரது மைனர் குழந்தைக்கும் எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– இடைக்கால வாழ்க்கை பொருளுதவியாக HMOP No.27/2024 மனு தாக்கல் செய்த 13.10.2023 ம் நாளிலிருந்து இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் நாள் வரை செலுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது

**3.** இம்மனு தாக்கல் செய்த கடந்த 13.10.2023 ம் நாள் முதல், இம்மனு உத்தரவு நாளான 11.11.2025 ம் நாள் வரை மனுதாரருக்கு எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டிய நிலுவை தொகையினை, 11.11.2025 ம் நாள் முதல் மூன்று (3) மாத காலத்திற்குள் மொத்தமாக வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

**4.** உத்தரவு நாளான 11.11.2025 ம் தேதிக்கு பிறகு ஒவ்வொரு மாத வாழ்க்கை பொருளுதவியை எதிர்வரும் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5 ம் தேதிக்குள் எதிர்மனுதாரர், மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**5.** மனுவின் செலவுத் தொகையை மனுதாரருக்கு எதிர்மனுதாரர் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு பகரப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.11 15:53:37 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

| | |
|---|---|
| **மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள்** | **: இல்லை** |
| **மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள்** | **: இல்லை** |
| **எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** | **: இல்லை** |
| **எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** | **: இல்லை** |

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.11 15:53:42 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்**
**முன்னிலை. திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L..,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056 விசுவாசு வருடம் ஐப்பசி மாதம் 25 ஆம் நாள்**

**I.A.No .08/2025**
**in**
**H.M.O.P.No.27/2024**
**(CNR.No.TNDG190003302024)**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் டவுன், கைராசிநகர், க.எண்.47/A/8 ல் வசித்து வரும் முனிஸ்வரன் மகளும், ஞானதயாளன் மனைவியுமான இந்து வயது சுமார் 26 உள்ள பவதாரணி ... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிராக/

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், கோட்டைக்காரப்பட்டி, க.எண்.4/98/1 ல் வசிக்கும் நாகராஜ் அவர்கள் மகன் இந்து வயது சுமார் 35 உள்ள ஞானதயாளன் ... எதிர்மனுதாரர்/மனுதாரர்

மனுதாரரின் அடிப்படை தேவையான உணவு, உடை, உறைவிடம், மருத்துவம் மற்றும் இம்மனு செலவுதொகை ஆகியவைகளுக்காக மாதந்தோறும் ரூ.20,000/—மும், மனுதாரரின் மைனர் மகளின் உணவு, உடை, மருத்துவம், பராமரிப்பு ஆகியவற்றிற்கு மாதம் தோறும் ரூ.20,000/—மும், ஆக மொத்தம் ரூ.40,000/— இடைக்கால ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர்/மனுதாரர் வழங்கிட உத்தரவிட வேண்டி இந்து திருமணச்சட்டம் பிரிவு 24 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கலான நாள் : 06.02.2025**

**மனு மீதான வில்லை : 20**

இம்மனுவானது கடந்த 06.02.2025 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, அன்றைய தினமே கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 29.10.2025 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர்

திரு.M.சௌந்திரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.முத்துபாண்டி அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிருரை, சான்றாவணங்கள், வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பின் வரும் கட்டளை மற்றும் உத்தரவாணையை வழங்குகின்றது.

## உத்தரவாணை

1. இம்மனு பகுதியாக அனுமதித்து உத்தரவாணையிடப்படுகிறது.

2. மனுதாரருக்கும், அவரது மைனர் குழந்தைக்கும் எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– இடைக்கால வாழ்க்கை பொருளுதவியாக HMOP No.27/2024 மனு தாக்கல் செய்த 13.10.2023 ம் நாளிலிருந்து இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் நாள் வரை செலுத்த வேண்டும் என உத்தரவாணையிடப்படுகிறது.

3. இம்மனு தாக்கல் செய்த கடந்த 13.10.2023 ம் நாள் முதல், இம்மனு உத்தரவு நாளான 11.11.2025 ம் நாள் வரை மனுதாரருக்கு எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டிய நிலுவை தொகையினை, 11.11.2025 ம் நாள் முதல் மூன்று (3) மாத காலத்திற்குள் மொத்தமாக வழங்க வேண்டும் என்று உத்தரவாணையிடப்படுகிறது.

4. உத்தரவு நாளான 11.11.2025 ம் தேதிக்கு பிறகு ஒவ்வொரு மாத வாழ்க்கை பொருளுதவியை எதிர்வரும் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5 ம் தேதிக்குள் எதிர்மனுதாரர், மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் செலுத்த வேண்டும் என உத்தரவாணையிடப்படுகிறது.

5. மனுவின் செலவுத் தொகையை மனுதாரருக்கு எதிர்மனுதாரர் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

**சொத்து விபரம்** – இல்லை

**செலவுபட்டியல்**

| | மனுதாரர் ரூ. | எதிர்மனுதாரர் ரூ. |
|---|---|---|
| மனுவின் மீதான ஸ்டாம்ப் | ரூ.20.00 | |
| வக்காலத்திற்கான ஸ்டாம்ப் | ரூ.10.00 | |
| | | |
| | செலவுபட்டியல் தாக்கல் இல்லை | |
| மொத்தம் | 20.00 | |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.11 15:53:29 +0530

**சார்பு நீதிமன்றம்,**
**ஒட்டன்சத்திரம்**